நாள் 01.10.2024

CC 138/2015

அசா 1

பெயர் : சப்னா யாஸ்மின்

க/பெ.ஆசாத்

(Accused 1 to 5 absent. Petition u/s.317 Crpc filed and allowed)

<u>எதிரிகள் 1 - 5 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

1. என் கணவர் ஆசாத் கோவை, குடும்ப நல நீதிமன்றத்தில் என் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த பிராதின் சான்றிட்ட நகல் தற்போது என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த பிராது **நீசாஆ 1** ஆகும். மேற்படி வழக்கு O.S.No.18/2015 ல் கோவை, குடும்ப நல நீதிமன்றம் பகன்ற தீர்ப்பின் சான்றிட்ட நகல் தற்போது என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த தீர்ப்பு **நீசாஆ 2** ஆகும்,

2. 24.05.2014 மற்றும் 24.06.2014 மற்றும் 31.05.2014 ஆகிய தேதிகளில் என் கணவர் ஆசாத் எனக்கு அனுப்பிய தலாக் நோட்டிஸ்களின் ஒளிநகல் தற்போது என்னிடம் காட்டப்படுபவைதான் என்றால் சரிதான். 24.05.2014 தேதியிட்ட தலாக் நோட்டிஸ் ஒளிநகல் **எசாஆ 1** ஆகும், 24.06.2014 தேதியிட்ட தலாக் நோட்டிஸ் ஒளிநகல் **எசாஆ 2** ஆகும். 31.05.2014 தேதியிட்ட தலாக் நோட்டிஸ் ஒளிநகல் **எசாஆ 3** ஆகும்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு ஒப்புகை அட்டைகளில் உள்ள முகவரிகள் என்னுடையதுதான். அவற்றில் காணப்படும் கையொப்பங்கள் என்னுடையதுதான். மேற்படி ஒப்புகை அட்டைகள்(2 எண்ணிக்கைகள்) **எசாஆ 4** ஆகும்.

4. கோவை குடும்பநல நீதிமன்றத்தில் ஒரு முறை ஆஜராகியுள்ளேன். என் கணவர் குடும்பத்தை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் நகைகள் அனைத்தையும் திரும்ப பெற்றுக்கொண்டபிறகுதான் என் கணவக்கு விவாகரத்து வழங்க நான் சம்மதித்தேன் என்றால் சரியல்ல.

5. பள்ளிவாசலில் என் கணவர் தரப்பில்தான் தவறு இருப்பதாகவும் எனது உடைமைகள் என் கணவர் வசம் இருப்பதாகவும் அறிக்கையில் எழுதினார்கள். மேற்படி பள்ளிவாசல் கொடுத்த அறிக்கையை போலீசாரிடம் கொடுத்துள்ளேன். அவ்வாறு எந்த அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக

பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் கணவர் வீட்டாரிடமிருந்து என் அனைத்து நகைகளையும் நான் திரும்ப பெற்றக்கொண்டுள்ளேன் என்று எழுதிக்கொடுத்துள்ளேன் என்றாலும் தற்போது அதற்கு முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedhranyan)
Judicial Magistrate No.I,
Pollachi.